சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 100/2023

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு.தங்கராஜ்<br>த/பெ.பாஸ்கரன் | நாள் 23.02.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் மனுவில் 3ம் தரப்பினர் மற்றும் மனுதாரர்கள் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

1ம் <u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்தவர் பெயர் சூர்ய குமார். அவர் எனது நண்பர். அவர் விபத்தின் போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியமளிக்கவில்லை. விபத்து சம்பந்தமாக புகார் ஏதும் அளிக்கவில்லை. நான் விபத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன சூர்ய குமார் என் நண்பர் என்பதால்

மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. மனுதாரர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் மற்றும் நீதிமன்றங்களில் இதற்கு முன்பு வழக்கு சம்பந்தமாக சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. நான் இளநிலை ஆங்கிலம் படித்துள்ளேன். குற்ற வழக்கில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. விபத்து நடந்து எவ்வளவு நேரம் கழித்து சென்றேன் என்றால் எனக்கு முன்பு தான் விபத்து ஏற்பட்டது. எனக்கு முன்பு இருசக்கர வாகனம் சென்றது. எதிரே லாரி வந்தது. லாரியின் வலது பக்கம் இருசக்கர வாகனம் மோதியது. இரு சக்கர வாகனத்தின் வலது பக்கம் அடிபட்டது. வாகனத்தின் முன்புறம், என்ஜின், கைப்பிடி ஆகியவை சேதமடைந்தது. அவருக்கு வலது புறம் இடுப்பில் அடிபட்டது. வேறு எங்கு அடிப்பட்டது என்றால் காலில் அடிபட்டது.

2) விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் அளித்தார் என எனக்கு தெரியாது. என்னுடன் என் ஊர் நபர்கள் இருந்தார்கள். அவர்கள் விபத்தை பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. மனுதாரர்களுக்கு நான் தகவல்

அளிக்கவில்லை. விபத்து சாலையின் நடுவே நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் வளைவு என்றால் இல்லை. அடிபட்டவுடன் எந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் 108 அவசர ஊர்தி மூலம் அனுப்பி வைத்தேன். 108 க்கு நான் தான் தகவல் கூறினேன். அந்த பதிவேடுகளை வரவழைத்தால் அந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். மனுதாரரருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.